# தனித்தன்மை நிறைந்த மலேசியர்கள்

மலேசியா **பல்லின மக்களைக்** கொண்ட ஒரு நாடு. நம் நாடு சுதந்திரம் பெற்றது முதல் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருவதற்கு இந்நாட்டில் நிலவி வரும் இனங்களுக்கிடையிலான வலுவான **ஒற்றுமை** மிக முக்கியமான காரணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்நாட்டில் வாழும் இனங்களைப் பற்றி அறிந்துகொள்ள கீழ்க்காணும் படத்தின் மீது 'கிளிக்' செய்து காணொளியைக் காண்க.



கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடை அளித்திடுக.

கேள்விகளுக்கான விடைகளைக் கண்டறிய உங்கள் பாடப் புத்தகத்தைத் (பக்கம் 66 முதல் 70 வரை) துணையாகக் கொள்க.

1 மலேசியாவில் வாழும் பெரும்பான்மை இனமாக _________ திகழ்கின்றனர்.

A சீனர்  B மலாய்க்காரர்கள்

C இந்தியர்கள்  D இபான்

2 மலாய்க்காரர்கள் _______________ சமயத்தைச் சார்ந்தவர்கள்.

A இந்து B கிறிஸ்துவ

C இஸ்லாமிய D புத்த

3 மலேசியாவின் ___________ பெரிய இனமாக இந்தியர்கள் திகழ்கின்றனர்.

A இரண்டாவது B மூன்றாவது

C நான்காவது D ஐந்தாவது

4 கீழ்க்காணும் படம் ___________________ இனத்தவர்களின் பாரம்பரிய உடையைக் காட்டுகிறது.



A ஈபான் B சயாம்

C சீனர் D சீக்கியர்

5 லோய் கிராத்தோங், சொங்கரான் ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடும் இனத்தவர்

A சீனர்
B கடசான்
C மலாய்க்காரர்
D சயாமிய வம்சாவழியினர்

6 பெரான்யோ, பிரபெய்ரா ஆகிய நடனங்கள் __________ சமூகத்தினரிடையே பிரசித்தி பெற்ற நடனங்களாகும்.

A செராணி
B கடசான்
C பாஜாவ்
D ஜாஹாய்

7 சீன நாட்டு வணிகர்கள் உள்நாட்டு மக்களைத் திருமணம் செய்ததன்வழி தோன்றிய சமூகம் எது?

A சீக்கியர்
B செட்டி சமூகத்தினர்
C சயாமிய வம்சாவழியினர்
D பாபா ஞோஞா

8 இந்திய நாட்டு வணிகர்கள் உள்நாட்டு மக்களைத் திருமணம் செய்ததன்வழி தோன்றிய சமூகம் எது?

A சீக்கியர்
B செட்டி சமூகத்தினர்
C சயாமிய வம்சாவழியினர்
D பாபா ஞோஞா

9 படத்தில் காணப்படும் இனத்தவர் எந்த மாநிலத்தில் அதிகம் வசிக்கின்றனர்?



A கெடா B பகாங்

C சபா D சரவாக்

10 பஞ்சாபி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களைக் காட்டும் படம் எது?

A 

B 

C 

D 